# Traditions of Tamil life styles

# தமிழர் வாழ்வியல் மரபுகள்

S.Gandhidurai suruli[1]
முனைவர் சு.காந்திதுரை
suruligandhidurai@gmail.com

***Apstract.*.**Sangakkala literature is a repository of biographies of the Tamil community. The way Sangam literature reveals the unique identity of the Tamil race in human history. Various historians claim that the Tamil race was the forerunner of world civilization. People have structured their lives with urban civilization as far back as two thousand years ago. The Sangam literature shows that family relations, agriculture and the virtues of life were better. Of these, biological traditions are unique. This article explains about the biological structures 'kaLavu' and 'kaRpu', male and female morals, duality in marriage life, human virtue, the specialty of hospitality, the humanity that can love other human beings, the cultural structure of Tamil people, the norm and the elements of life.

***Keywords***… *Sangakkala literature, biographies, agriculture, morals, human beings, cultural*

***ஆய்வுச்சாரம்***...சங்ககால இலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் எடுத்துரைக்கும் பெட்டகமாகத் திகழ்கிறது. மனித இனவரலாற்றில் தமிழ் இனம் தனித்த அடையாளத்தைக் கொண்டுள்ள தினை சங்க இலக்கியத்தின் வழி அறியலாம். உலகநாகரிகத்தின் முன்னோடி தமிழ் இனம் என்று பல்வேறு வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நகர நாகரிகத்தோடு மக்கள் தங்கள் வாழ்வியலைக் கட்டமைத்துள்ளனர். குடும்ப உறவு, வேளாண்மை, வாழ்வியல் அறம் ஆகியன சிறந்து விளங்கின என்பதினைச் சங்க இலக்கியம் வழி அறியமுடிகிறது. இவற்றில் வாழ்வியல் மரபுகள் தனித்த அடையாளமாகும். இவற்றில் களவு, கற்பு என்ற வாழ்வியல் கட்டமைப்பு, ஆண், பெண் ஒழுகலாறுகள், இல்வாழ்வில் இருவினைபங்கு, மனித அறம், விருந்தோம்பலின் சிறப்பு, பிற மனிதர்களை நேசிக்கக்கூடிய மனித நேயம், தமிழரின் பண்பாட்டுக் கட்டமைப்பு, வாழ்வியல் நெறி, கூறுகள் ஆகியன குறித்து இக்கட்டுரை விளக்கிச் செல்கிறது.

***கருச்சொற்கள்***... சங்க இலக்கியம், இனவரலாறு, வேளாண்மை, ஒழுக்கம், மனித உணர்வுகள், பண்பாடு

## ஆய்வுமுன்னோடிகள்

1.நா.செல்வராசு, 1988. சங்க இலக்கியமும் சமூகவாழ்வியலும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2. அ.தட்சினாமூர்த்தி, 2011. தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை.

3. தி.சு.நடராசன், 2019, தமிழர் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.

---

[1] The author in Associate professor, Department of Tamil, thiagarajar College, Madurai.

4. **பெ**.மாதையன், 2004, சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பதிப்பகம், சென்னை


## *ஆய்வு அணுகுமுறைகள்*

சங்க இலக்கியத்தில் தமிழர் வாழ்வியலுக்குள் வடமரபின் தாக்கம் இருப்பதால் பகுப்புமுறைத் திறனாய்வும் (Analytical Method) கருத்துக்களை விளக்குவதால் "விளக்கமுறைத் திறனாய்வும் (Descriptive Approach) பின்பற்றப்படுகின்றன. சமூகவியலும், மெய்யியலும் இவ்விரண்டு அணுகுமுறையும் மேற்கொள்ளப் படுகின்றன.

## *வாழ்வியல்மரபுகள்*

தமிழர் தம் வாழ்வியல் நெறிகள் சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு குழுவும் தனக்கென்று சிலக் கட்டமைப்பையும், கடமைகளையும் கையாளுகின்றன. இந்த கட்டுப்பாட்டை வழுக்கின்ற தலைமுறைகள் பின்பற்றுகின்றபோது மரபாக மையம் கொள்கிறது. "மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்வி சொற்களால் விளக்கும் கருவியாகும்" முன்னோர்களின் வாழ்வியல் தொகுப்புகளைத் தான் "**வாழ்வியல் மரபுகள்**" எனப் பழக்கத்தில் பயன்பாட்டில் இருந்துவருகிறது. இதில் தனிமனிதன் பொதுத்தளத்தில் எப்படி இயங்குகிறான். சமூகத்தளத்தில் அவனுடைய செய்பாடுகள் எல்லாம் தனிமனித வாழ்வியல் அடையாளத்தை அடையாளப்படுத்துகின்றது. இவை ஒழுக்களாறுகள், பண்புகள், ஒழுக்கமுறைமைகள், அறநெறிகள், ஆகியன பரவலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதை வாழ்வியலாகப் பின்பற்றுவதை வாழ்வியல்முறை என்கிறோம். வாழ்வியல்நெறிகள் என்றென்றும் பின்பற்றக் கூடியவை மாறாதவை. சமூகவாழ்வியல் நெறிமுறைகளை அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துக் கூறுவது பண்டைத் தமிழரின் வாழ்வியல் மரபாகும்.

இவ்வுலகில் வாழும் மனிதன் இன்பத்தை விரும்பிநிற்கிறான். இன்ப நுகர்ச்சிக்குத் தேவைப்படுவது பொருள். அப்பொருள் அறவழியில் வரவேண்டும் என்பதே தமிழரின் வாழ்வியல் மரபாக இருப்பதை, "**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**" (**தொல்**.) எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். வள்ளுவர் சற்று மேலே போய்வீடு பேற்றை சேர்த்துக்கொள்ள வேண்டுவதை, "**வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும், தெய்வத்துள் வைக்கப் படும்**." (**குறள்**. 50) எனக் குறிப்பிடுவதைக் காணலாம். சங்க இலக்கியத்தில் அறம் சார்ந்த வாழ்வியல், பொருள் சார்ந்த வாழ்வியல், இன்பம்சார்ந்த வாழ்வியல் மரபுகளை உள்ளடக்கியதாகும். தனக்கான வாழ்வியல் இலக்கணங்களைத் தம் எழுத்துக்கள் வழியாக இலக்கிய வழியாக எவ்வாறு வாழவேண்டும் என்ற வாழ்வியல் மரபுகளை வகுத்து அளித்து தொகுத்துத் தந்துள்ளார்கள். அவைகளை ஐந்து நிலைகளில் காணலாம்.



குடும்பம் இல்லறம் விருந்தோம்பல் ஈகை பிறவகையில் வகைப்படுத்திக் கொள்ளலாம்.

***குடும்பம்***

தலைவன் தலைவி இருவரும் அன்பாய் கருத்து ஒருமித்து வாழ வேண்டுவதை, கலித்தொகையில், "ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை எனக் கலித்தொகை" (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) குறிப்பது மணவாழ்க்கையில் அன்பை வெளிப்படுத்துவதாகும். இல்வாழ்க்கையில் வறுமைவந்த போதும், தன்பிறந்த வீட்டின் பெருமை பேசாமல், கணவன் பண்பிற்கு ஏற்ப வாழ்வதை, "அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனன்கொல், கொண்ட கொழுநன் குடிவறன் உற்று எனக் கொடுத்த தந்தைக் கொழும்சோறு உள்ளான், ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப் பொழுது மறந்த உண்ணும் சிறுமதுகையளே" (நற்றி.110) எனத் தலைவன் வழியிலே செல்லுவது தலைவியின் கடமையாகும். நீர்சொல்லும் வழியிலே ஓடும் குறுமணலைப் போல கணவன் வழியிலேயே நடந்து செல்கிறார் இல்லத்தரசி.

கந்தையானாலும் கசக்கிக்கட்டு, காடியானாலும் மூடிக்குடிஎன்ற பழமொழியை சிறுபாணாற்றுப்படையில் அடி.137-139. "குப்பைவேளை உப்புஇலி வெந்ததை, மடவோர் காட்சி நாணிடக் கடையடைத்து, இரும்பேர் ஒக்காலொடு ஒருங்குடன் மிசையும்" (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) இப்பாடல் வறுமைவந்த போது நாலாம் பேருக்கு தெரியாமல் கிடைத்ததை உண்டு மகிழ்வதே குடும்பமாகும்.

குடும்பத் தலைவன் பொருள் ஈட்டவேண்டும். குடும்பத்தைத் தலைவி பேனுபவராக இருப்பதை, "வினையே ஆடவர்க்குயிரே வாணுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" **எனக் கூந்தொகை குறிப்பிடுகிறது**. (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனக் குடும்பம் சிறக்கமகளிர் அவசியம் எனக் கருதினான். மனைக்கு 'விளக்குமடவார்' எனக் கூறுவது புலனாகின்றது.

குடும்பம் என்பதே பெருஞ்செல்வம் தான் மனைவி மக்கள் என்புடை சூழவாழ்வதே பேரின்பம், எது பேரின்பம் மணவாழ்வில் புதல்வரைப் பேணுதல் எனப்பாண்டியன் அறிவுடைநம்பி, மலைஅளவு செல்வம் இருந்து பயன் இல்லை. வாழ்விற்கான இன்பம் மழலைதான். மழலையில்லை என்றால் வாழ்க்கை சுவைபடாது என்பதை, "குறுகுறுநடந்து சிறுகைநீட்டி இட்டும் தொட்டும் கவ்வியும் வுழந்தும், நெய்யுடைஅடிசில் மெய்ப்பட விதிர்த்தும் மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை –தாம்வாழு நாளே" (புறம்.188) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனநாம் வாழும் நாளில் பயன்எது தெரியுமா நல்ல குழந்தைகளைப் பெறுதல் தான் இன்பம் எனக் கூறுகிறார்.

**"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும், செல்வம் அன்று தன்செய்வினைப் பயனே சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர், புன்கண் அஞ்சும் பணிபின் மென்கண் செல்வஞ் செல்வமென்பதுவே"** (நற்.210) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனக் கூறுவதால் ஏழைஎளியோரின் துன்பத்தைப் போக்கி கருணையும் கணிடவும் கொண்ட கண்ணோட்ட முடையவராய் வாழ்வதே உண்மையான வாழ்க்கை. வாழ்வியலுக்குச் செல்வம் எது என்பதையும் நம்முன்னோர் தெளிவாகப் புலனாகின்றது.

## *இல்லறவாழ்க்கை*

இயற்கைவழி நின்று ஒன்றுபட்டு வாழவேண்டியது இல்லறமாகும். "**தாமரை தண்டாதூதி மீமிசைச்**, **சாந்தின் தொடுத்த தீந்தேன்போப். புரையமன்ற புரையோர் கேண்மை**" (**நற்**.13) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) இல்லறம் நல்லறமாக வாழ்வதற்கு இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள்.

கணவன் மகிழ்ந்து உண்ணவேண்டும். தலைவி தன்னை பாராட்டவேண்டும், அதுவும் கணவன் மகிழ்ந்து **பாராட்டுவதை "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**, **கழுவுறுலிங்கம் கழாஅதுஉடீ**, **குவளை உன்கண் குய்ப்புகை கடிக்கத்தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்" (குறு**.167) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனத் தலைவி இல்லறக் கடமையில் சமைப்பது எத்தகையதாயின் மகிழ்ந்து உண்டு பாராட்டுகின்ற போது இல்லறம் நல்லறமாகும் கணவன் மனைவி இருவரும் அன்பு பாராட்டும் வாழ்வியலாகும்.

இல்லறக் கடமையில் தலைவன் பொருள் ஈட்டுவது. மனைவி இல்லறக் கடமைகளைக் கவனிப்பது. இங்கேபாணன் தன்பரிசாகப் பெற்று வந்தபெருவளத்தை நாமே உண்டு வாழ்தல் நகைப்புஉரியது. ஆகவேயார் யாருக்க எவ்வளவு தரவேண்டும். நீகொடுக்க விரும்பியவர்களுக்கு கொடு உனக்கு உரிமைஉண்டு. கணவனிடம் கேட்க வேண்டியதில்லை எனக் கூறுவதை, "**நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்**, **இன்னோர்க்குஎன்னாது**, **என்னொடு சூழாது**, **வல்லாங்கு வாழ்தும் என்னாதுநீயும்**, **எல்லோருக்கும் கொடுமதி மனிகிழவோயே" (புறம்**.163) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனப்பகுத் துண்டுவாழ்வதற்கான பெருநெறிபிடித்து ஒழுகியவர்களாக வாழ்ந்ததை உணரமுடிகின்றது. இல்லறத்தில் தலைவன் தலைவிக்கு மனைக்கடமை ஆற்ற துணைசெய்தது புலனாகின்றது.

தலைவன் மீதுதலைவி கொண்ட அன்பைஅளவிடமுடியாது என்பதைப் பின்வரும் பாடலால் உணரலாம். "நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆர்அளவின்றே-சாரல், கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) சங்ககால மக்கள் அகத்திலும் புறத்திலும் தன்னிகரில்லாத வகையில் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக காதல் வாழ்விலும் குரிதலுடனும் விட்டுக்கொடுத்துப் போகும் மனப்பக்குவத்துடனும் இருந்துள்ளதை உணரமுடிகிறது.

மேலும், விருந்தோம்பல், பொருள்தேடுதல், கல்வி, ஈகை போன்ற மரபுகளை வாழ்வியலோடு வகுத்து வாழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

தலைவன் பிரிவால்வாடும் தலைவி அவன் வரவைச் சவரில் கோடிட்டுக் காட்டும் வழக்கமும், காதலன் வரவைப் பல்லிகூறுவதாகக் கருதுவதும் மக்களின் நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும், மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, கொடைத்திறம், மன்னர்களைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றையும் அறியமுடிகிறது. "**என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்**, **தன்கைக் கொண்டு என்நல்நுதல் நீவியும் அன்னைபோல இனிய கூறியும்**,

**கள்வர்போலக் கொடியன் மாதோ, மணி எனஇழிதரும் அருவி பொன்என, ...... கோடுஉயர் பிறங்கல் மழை கிழவோனே"** (**நற்**.28) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனப் பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைவிக்குத் தோழி சொல்லியது.

## *விருந்தோம்பல்*

விருந்து என்றால் இப்போது எல்லோரையும் விடருந்தினர் என்ற ஒற்றைச்சொல் சொல்லி அழைக்கிறார்கள். விருந்து என்றால் முன்பின் அறியாதவர்கள் யாதோரு காரணமின்றி உணவு வேலையில் வீட்டுக்கு வருவோரை உபசரித்து உணவு பரிமாறுவதாகும். இப்பண்பு இல்லறமகளிருக்கு இன்றியமையாதப் பண்புகளுள் ஒன்றாக காலம் காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வருவதாகும். இரவுப் பொழுதாயினும் வந்தவிருந்தினரைக் கண்டு மகிழ்கின்ற இயல்பைக் கொண்டவள் நம் தலைவி என்பதை "**அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும், முல்லை சான்ற கற்பின், மெல் இயற் குறுமகள்"** (**நற்**.149) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனத் தமிழர் தம்வாழ்வியல் கடமையில் விருந்தினரைப் போற்றி உபசரித்தல் பேரறமாகும்.

குறிஞ்சி நிலத்தில் கொழுத்தப் பன்றியை வேட்டையாடிக் கொண்டு வந்ததை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்த பின்னர், தனது குடிசார்ந்த சுற்றத்திற்கும் பகிர்வதைக் "**கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை, தேம்கமழ் ததுப்பின்கொடிச்சி கிழங்கொடு, காந்தன்அம் குறுகுடிப் பருக்கம்"** (**நற்.பா**.85:8-10) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) என்பது புலனாகின்றது. கார்காலத்தின் போது மிகுந்த குளிர் காற்று வீசும் வேளையில் ஒருவர் பிச்சை கேட்டு வரவே, அவருக்கு வென்சோற்றுடன் செம்புநிறைய வெந்நீரைத்தந்து உபசரித்துள்ளதை "**ஆசுஇல் தெருவின் ஆசுஇல் வியன்கடை செந்நெல் அமலை, வெண்மைவெள் இழுதுஓர், இல்பிச்சை ஆரமாந்தி அற்சிர, பெய்யவெப்பந் தண்ணீர், சேமச்செப்பில் பெறீஇயரோ நீயே"** (**குற**. 207) எனத் தம் இல்லம் நாடிவந்த பிச்சைக்காரர் எனப் பார்க்காமல் விருந்து படைத்து குடிக்கத் தண்ணீரும் தந்தமையை என்னும் போது வியப்பாக இருக்கிறது. காலம் அதன் எண்ணங்களையும், செல்களை தன்போக்கில் செயல்படத் தலைப்படுகிறது. இங்கே விருந்தோம்பல் என்பது மனித மனங்களின்அடையாளம் பார்க்கமுடிகின்றது.

"**நல்மனை நனிவிருந்து அயரும், கைதூ இன்மையின் எய்தாம்மாறே"** (**நற்**.280) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) விருந்தனை எதிர்கொள்ள வேண்டிய சூழல் விரும்பி ஏற்கும் மனநிலையைக் காணமுடிகின்றது. இவ்வுலகில் எல்லாம் இருந்து என்ன பயன்வருந்திவந்தோருக்கு உணவுதந்து ஆற்றவேண்டும். எச்செயலைச் செய்ய வல்லவராயினும் இயலாதவராயினும் பசியால் வாடிவந்தோரின் முகம்பார்த்து உணவளித்துப் பசியைப் போக்கியவனே எல்லாம் உடையவன் என்பதை, "**திங்கட் பத்தேன் திரிதரும் உலகத்து, வல்லோர் ஆயினும் வல்லுனர் ஆயினும், வருந்தி வந்தோர் மருங்க நோக்கி, அருளவல்லை ஆகுமதி"** (**புறம்**.27) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனக் குறிப்பிடுவது புலனாகிறது. இறப்பைத் தடுக்கும் அமிழ்தே யாயினும் விருந்தினரைப்

புறக்கணித்துத் தாம் மட்டும் உண்ணும் பண்பில்லாததை, "**உண்டால்அம்ம இவ்வுலகம் இந்திரர், அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத், தமியர் உண்டலும் இலரே முனிவர்**" (**புறம்**.182) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) பிறருக்குக் கொடுத்து உண்ணவேண்டும் இதற்கு ஒரு படி மேலே போய், சிறுபஞ்சமூலம் எக்குலத்தவராயினும் பசிஎன்று வந்தவர்களுக்கு உணவளித்தால் தவம் செய்தற்கு இணையாகக் கருதப்பட்டதை, "**இழிசினர்க் கேயாரனும் பசித்தார்க் கூண்ஈதல், கழிசினம் காத்தல் கடன்**"எனத் தவப்பயன் செய்தற்கு ஒப்பாகும் எனப்பதிவு செய்யப்பெற்றுள்ளது.

பசி என வந்தவருக்கு உணவளிக்க வேண்டுவதை "**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**"எனப் பசிக்கு உணவளித்தவன் உயிர் கொடுத்தவனாகக் கருதப்படுகிறான். "**பசிப்பிணி மருத்துவின் இல்லம் அணிதோ**? **செய்தோ**? **கூறுமின் மெக்கே**" (**புறம்**.73) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனக் கேட்பது வாழ்வியல் அறமாகவே தமிழர்கள் பார்த்தார்கள் சோதர்மன் "சூல்" நாவலில் என்டோ. காசுக்காடா சோறு போடுறாக எனக் கேட்பார், கேட்டு அவுங்க அஞ்ஞாஏலே! காசுக்கு சோறு போட்டா பாவம்ளோ... எனக் கூறுவது நினைவுகொள்ளத் தக்கது. இன்றையநிலை வேறுபோய் உணவளித்தல் அறமல்ல, இலாபம் தரும் தொழிலாகப் பார்க்கப்படுகிறது.

### *ஈகையும் புகழும்*

தமிழ் வாழ்வியல் முறையில் பொருள் ஈட்டல் "**வினை ஆடவருக்கு உயிரே**"எனப் போற்றப்பட்ட சமூகமாகும். பொருள் ஈட்டினால் மட்டும் போதுமா? இல்லை பிறருக்கு தந்து இன்புறுவதை, செல்வத்துப் பயன்ஈதல் (புறம்.89) எனத் தான்பெற்ற பெருவளத்தை எந்த எதிர்பார்ப்புமின்றித் தேவைப்படுவோருக்குத் தேவைப்படும் நேரத்தில் கொடுத்து இன்புறுவதை ஈதலாகும். "**ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்**" (**கலி**.133) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனத் துன்பப்படுவோருக்குக் கொடுத்து உதவவேண்டும்.

தம்மிடம் உள்ளதைப் பகுத்துக் கொடுக்கும் பான்மையுடையவராக இருத்தல் அவசியம் "**உண்டாயின் பதங்கொடுத்து இல்லான் உடனுண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்**" (**புறம்**.95) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனத் தம்மிடம் உள்ளவைகளைப் பிறருக்குத் தரும்போது வாழ்க்கை பயன்பெறுகிறது.

### *தமிழரின்உணவு, உடை*

தமிழரின் வாழ்வியல் முறைகளில் மிகவும் முக்கியமானது உணவு, உடைஆகும். சங்கத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வியலைக் கொண்டுள்ளனர். உணவு என்பது ஒவ்வொரு திணைசார்ந்த மக்களும் அத்திணைக்குரிய உணவு வகைகளையே உண்டுவாழ்ந்தார்கள்.

மருதநிலத்தில் வாழ்ந்தமக்கள் பெரிதும் நெற்சோற்றையே உண்டுவந்தனர். ஏனெனில் நெல்என்பது வயலும் வயல்சார்ந்த பகுதியில் சமநிலப் பகுதியில் நீரினைச் சேமித்து வைத்து முறையாக விவசாயம் செய்து விளைவித்தனர் மருதநிலமக்கள். "**இருங்கழை உலக்கை இரும்புமுகம் தேய்த்த, அவைப்பு**

**மாண்அரிசி அமலை வெண்சோறு, கவைத்தான் அலவன் கலவையொடு பெருகுவிரி" (சிறுபாண்.**193) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) என்ற அடிகளில் நெல்லை உலக்கையால் குத்தி அரிசியாக்கி அதனை சமைத்து நன்கு உணவோடு கலந்து உண்டனர் என்று குறிப்பிடுகின்றன. இப்படியான தன்திணை வாழ்வியலுக்கு உட்பட்டு உணவைச் சமைத்துச் சாப்பிட்டனர் என்று இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

"உடலை வளர்க்க உணவு தேவைப்படுவது போல உயிரை வளப்படுத்த வழிபாடு தேவைப்படுகிறது" என்று மா. இராசமாணிக்கனார் எனக் குறிப்பிடுகிறார். சங்க காலமக்கள் ஈசலை மோரில் ஊற வைத்து சமைத்துஉண்டதை

**"செம்புற்று ஈயலின் இன்அளைப் புளித்து,**

**மென்தினை யாணர்த்து நற்றும் எனல்லோ" (புறம்.**119) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) என்ற அடிகள் விளக்குகின்றன.

அதேபோல கள் என்பது அன்றைய சமூகத்தில் ஏற்றமற்ற செயலாக இருந்தது என்பதினைச் சங்கப்பாடல்கள் மூலம் நாம் அறியமுடிகிறது. கள் என்பது அன்றாட இயற்கை உணவாகும். "**இன்கருங் கண்ணின் ஆமூர் ஆங்கண், மைத்துடை மல்லன் மருக்கி" (புறம்.**80) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) என்ற அடிகள் இனிமையும், புளிப்பும் உள்ள கண்ணை உடைய ஆமூர் என்று குறிப்பிடுகின்றன. இத்தகைய சான்றுகளிலிருந்து 'கள்'என்பது தமிழர் மரபில் ஒன்றிய உணவாகும்.

***உடை***

சங்ககாலச் சமூகமான நாகரிககால கட்டத்தில் உடை சிறந்த இடத்தினைப் பெற்றிருந்தது. தமிழர்கள் மிக நேர்த்தியான வேலைப்பாடு மிகுந்த ஆடையினை அணிந்திருந்தனர். "**நோக்குநுழை கல்லா நுண்மையபூ க்கனிந்து, அரவுரியன்ன அறுவை நல்கி."(பொருந.**82) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனும் அடிகள் பாம்பின் சட்டையைப் போன்று மிகவும் மெல்லியதான ஆடையை அணிந்தனர் என்று குறிப்பிடுகின்றன. அதேபோல, "**பாம்பு ரியனை வடிவின் காம்பின், கழைபடு சொலியின் இழை யணிவாரா, ஒண்பூங் கலிங்கம்." (புறம்.**383) (சங்க இலக்கியம்,1998. நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.) எனும் அடிகள் எனப் பாம்புச்சட்டை போன்ற வடிவினதும் மூங்கில் உள்ளே உள்ள சோற்றைப் போன்றதும் மெல்லிய நெருங்கிய அழகான பூவேலைப் பாடுடையதுமாகிய ஆடையை அதியன் எனும் மன்னன் அணியச் செய்தான். ஆடை மிகநேர்த்தியாகத் தனித்த அடையாளத்தோடு சங்ககால மக்கள் அணிந்தனர் என்பதினை இதன்வழி அறியமுடிகிறது.

## ***முடிவுரை***

தமிழர் தம் குடும்ப வாழ்க்கையும் மிகவும் பண்பட்ட வாழ்வியல் முறையாகக் காணமுடிகின்றது. தனித்துவமான வாழ்வியல் முறையில் குடும்ப அமைப்பு மிகவும் வலுவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழர் அகவாழ்க்கை இன்றளவும் பேணிப்பாது காக்கக் கூடிய முறையாக இருக்கிறது. தலைவன் கணவன், இல்லால் மனைவி, நல்ல மக்கட்பேறு அடங்கியதைத் தன்குடும்பமாகக் கருதித் தமிழர்கள் வாழ்ந்து வந்தார்கள். சமூக அமைப்பில் குடும்பம் மதிப்புக்கு உரியதாகும். குடும்ப

வாழ்வில் ஒழுக்கம் பிரதானமாகும் புறவாழ்க்கையில் வீரமும் ஈகையும், புகழும் தனிமனித சமூக மதிப்புக்கான ஒன்றாக அடையாளம் காணப்படுகிறது. பழிச்சொல் கண்டு தமிழ்ச் சமூகம் அஞ்சியதைப் புறத்தில் தெளிவாகக் காணலாம். புகழுக்கு முக்கியத்துவம் தந்தார்கள்.

## *References:*


1. Dhachanamoorhy., A., (2011). ***Thamizar Nagarikamum panbaadum,*** Yal pathippagam, Chennai.
2. Madhaiyan., Pe., (2004). ***Sangakaala inakkulu samuthayamum arasu uruvakkamum,*** Pavai Pathippagam, Chennai.
3. Nadarasan., Thi. Su., (2019). ***Thamizar panpaattu veligal,*** NCPH, Chennai.
4. Raasamaanickanaar. Maa, (1995.) ***Thamizhar Nagarigamum Panpaadum,*** Paari Nilaiyam, Chennai - 01.
5. Saaminathaiyar V, 2. (1974). ***Paththuppaattu Moolamum,*** Uraiyaasiriyar Bhaaraththuvaasi Nachchinaarkkiniyar Uraiyum, U.V. Saaminathaiyar Nuul Nilaiyam, Thiruvaanmaiyur, Chennai – 41.
6. ***Sanga Ilakkiyam (Paththuppaattu, Ettuththogai),*** (1998). New Century Book House (P) Ltd, 41- B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai - 98.
7. Selvarasu.,Na., (1988). ***Sanga ilakkiyamum samuga vaalviyalum,*** Manivasakar pathippagam, Chennai.